2010 நவம்பர் 12]

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ *10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 2, for the expression "one lakh rupees", substitute the expression "five lakh rupees"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரவிச்சந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்ட திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருக்கும்போது ஒருவர் இறந்துபோக நேரிட்டால், அவருடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்துவதற்கு இப்போது திருத்தம் கொண்டுவரப்பட இருக்கிறது. பேரவையில் உறுப்பினராக இருக்கிறபோது, ஒருவர் இறந்துபோக நேரிட்டால் அவருடைய குடும்பத்திற்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் ஏற்கெனவே உறுப்பினராக இருந்து பணியாற்றியவருடைய குடும்பத்திற்கு இந்தத் தொகை வழங்கப்படுவதில்லை. பேரவையில் உறுப்பினராக இருப்பவர் சம்பளம் பெறுவதைப்போல, ஏற்கெனவே உறுப்பினராக இருந்து, ஓய்வூதியம் பெற்று, தற்போதைய உறுப்பினரைப் போலவே மருத்துவ

வசதியும் வழங்கப்படுகிறது. இந்நிலையில் உறுப்பினராக இருப்பவர் இறந்துபோனால், அவருடைய குடும்பத்திற்கு ஆறுதலாக இந்தத் தொகை வழங்கப்படுவதைப்போல, ஏற்கெனவே உறுப்பினராக இருந்து, அவர் இறந்துபோக நேரிட்டால், அவருடைய குடும்பத்திற்கும் தொகை வழங்கப்படுவதே சரியான நடைமுறையாக இருக்கும் என்ற திருத்தத்தை மேற்கொள்ளவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி ஏற்கெனவே ரூபாய் 10 ஆயிரம் வழங்குவதாக இருந்தது; ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதாக உயர்த்தப்பட்டு, இப்பொழுது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்துவதற்காகச் சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது. இதை வேறுவிதமாகத் தீர்மானிப்பதற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 12

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.